ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අතිවිශේෂමානது

අංක 1763/25 - 2012 ජුනි මස 22 වැනි සිකුරාදා - 2012.06.22

*1763/25 ஆம் இலக்கம் – 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 277/40*

### *(188 ஆம் அத்தியாயமான) புராதனப் பொருட்கள் கட்டளைச்சட்டம்*

*(188 ஆம் அத்தியாயமான) புராதனப் பொருட்கள் கட்டளைச்சட்டத்தின் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 47 ஆம் பிரிவின் கீழ் தேசிய மரபுரிமை அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

ஜகத் பாலசூரிய,
தேசிய மரபுரிமை அமைச்சர்.

தேசிய மரபுரிமை அமைச்சு,
8 ஆம் மாடி,
"செத்சிரிபாய",
பத்தரமுல்லை,
2012, யூன் 20.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2012 ஆம் ஆண்டின் ................ ஆம் இலக்க, புராதனப் பொருட்கள் வெகுமதி நிதிய ஒழுங்குவிதி என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும், புராதனப் பொருட்கள் வெகுமதி நிதியம் பின்வரும் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) தொல்பொருள் திணைக்களத்தின் அலுவலர்களுக்கும் தகவல் தருநர்களுக்கும் பொலிசுத் திணைக்களத்தின் அலுவலர்களுக்கும் புராதனப் பொருட்களின் பாதுகாப்பிற்குப் பங்களிப்புச் செய்யும் வேறு ஏதேனும் பகிரங்க நிறுவனத்தின் அலுவலர்களுக்கும் வெகுமதிக் கொடுப்பனவுகள் செய்வதற்கு;

(ஆ) புராதனப் பொருட்களின் அழிவைத் தடைசெய்தல் தொடர்பில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களைக் கொண்டு நடாத்துவதற்கும்;

(இ) தொல்பொருள் திணைக்களத்தின் பணியாட்டொகுதியின் பொழுதுபோக்கு, களியாட்ட மற்றும் நலன்புரி நடவடிக்கைகளுக்கு ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் ரூபா வரையறையொன்றிற்கமைய நிதியளிப்பு செய்வதற்கு;

(ஈ) பாராட்டத்தக்க வீரம் நிறைந்த செயற்பாடுகளுக்கு அல்லது அங்கீகரிக்கப்படவேண்டிய அல்லது போற்றத்தகுந்த வேறு எவையேனும் செயற்பாடுகளுக்கு வெகுமதியாக கொடுப்பனவு செய்வதற்கு;

(உ) விடயத்திற்கேற்ப அவசரமானதும் அத்தியாவசியமானதுமான பேணிக்காத்தல் செயற்பாடொன்றுக்கு அல்லது தொல்பொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதி அவரது தற்றுணிபின்படி தேவைப்படுத்தக்கூடிய ஏதேனும் செயற்பாட்டிற்கு பணக்கொடுப்பனவொன்றைச் செய்வதற்கு;

(ஊ) அத்தியாவசிய புராதனப் பொருட்களின் கொள்வனவு தொடர்பிலான கொடுப்பனவுகளைச் செய்வதற்கு.

3. நிதியத்திலிருந்து செய்யப்படும் கொடுப்பனவுகளில் பின்வருவன அடங்குதல் வேண்டும்:-

(அ) நிதியத்திற்கான எல்லா பெறுகைகளினதும் தொண்ணூற்றேழு சதவீதம் பிரதானமாக தொல்பொருளியல் திணைக்களத்தின் அலுவலர்களுக்கும் வேறு அரசாங்க அலுவலர்களுக்குமான கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்;

(ஆ) நிதியத்தை நடைமுறைப்படுத்துதல் தொடர்பிலான கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்தப்படவேண்டியதுமான மூன்று சதவீதம்; அத்துடன் ஐந்து இலட்சம் ரூபா அதிகபட்ச வரையறைக்கமைய தொல்பொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதி நிதியத்திலிருக்கும் பணத்திலிருந்து ஒழுங்குவிதி 2(ஆ) முதல் (உ) வரையில் குறிப்பிடப்பட்ட நோக்கம் ஒவ்வொன்றிற்கும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத கொடுப்பனவுகளுக்கு அனுமதியளிக்கலாம். ஆயின், எவ்வாறாயினும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சிய கொடுப்பனவுகள் தேசிய மரபுரிமை என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடன் செய்யப்படலாம்.

4. தொல்பொருளியல் திணைக்களத்தின் அலுவலர்களுக்கும் வேறு நிறுவனங்களின் அலுவலர்களுக்கும் வேறு எவரேனும் தனியாளுக்குமான பண ஒதுக்கீடு இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட முறையில் செய்யப்படுதல் வேண்டும்.

5. நிதியத்தின் கீழ் வெகுமதியொன்றைப் பெறுவதற்குத் தகுதியுடைய ஆளெவரும் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பமொன்றை தொல்பொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும்.

6. இந்த ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு தொல்பொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதிக்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

7. இந்த ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் 2010, சனவரி 1 ஆம் திகதியிலிருந்து பயனுறுவதாகக் கருதப்படல் வேண்டும்.

8. 2010, மே 7 ஆம் திகதிய 1653 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2011, நவம்பர் 02 ஆந் திகதிய 1730/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியிலும் வெளியிடப்பட்ட 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, புராதனப் பொருட்கள் வெகுமதி நிதிய ஒழுங்குவிதிகள் அதன்கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.

## அட்டவணை I

(ஒழுங்குவிதி 4)

வெகுமதியான பணத்தின் ஒதுக்கீடு பின்வரும் முறையிலிருத்தல் வேண்டும்.

| நிரல் I | நிரல் II | |
|---|---|---|
| (i) | பொலிசுத் திணைக்களத்தின் அலுவலர் ஒருவர் அல்லது இலங்கை சுங்கத்தின் எவரேனும் அலுவலர் அல்லது புராதனப் பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரனாக ஏதேனும் புராதனப் பொருட்களின் ஏற்றுமதியைக் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டுள்ள வேறு நிறுவனங்களின் அலுவலர்கள் | 30% |
| (ii) | புராதனப் பொருட்களைப் பாதுகாப்பதற்குத் தகவல் வழங்கும் தகவல் தருநர் ஒருவர் | 10% |
| (iii) | இயைபான அமைவிடங்களின் பரிசோதனையில் ஈடுபட்டுள்ள பதவிநிலை அலுவலரின் தரத்திற்குக் குறைந்த புலனாய்வு அலுவலர் ஒருவர் அல்லது தொல்பொருளியல் ஆராய்ச்சி உதவியாளர் அல்லது அமைவிடத்தை பரிசீலனை செய்வதற்கு தொல் பொருளியல் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் | 12% |
| (iv) | தொல்பொருளியல் திணைக்களத்தின் சட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தொல்பொருளியல் திணைக்களத்தின் சட்ட அலுவலர் உதவிச் சட்ட அலுவலர் அல்லது அரச சட்டத்தரணி ஒருவர் | 9% |
| (v) | தொல்பொருளியல் திணைக்களத்தின் சட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மாகாணத் தலைமையதிகாரிகள் | 7% |

**அட்டவணை I** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | |
|---|---|---|
| (vi) | *சட்ட நடவடிக்கைகளுக்கு அமைந்த இயைபான அமைவிடங்களைப் பரிசோதிப்பதில் ஈடுபட்டுள்ள பதவி நிலைய அலுவலர் ஒருவர்* | 6% |
| (vii) | *தொல்பொருளியல் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரால் அதிகாரமளிக்கப் பட்ட அலுவலர் ஒருவர்* | 5% |
| (viii) | *நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகள் தொடர்பில் அறிக்கைகள் தயாரித்தலிலும் பேணலிலும் ஈடுபட்டுள்ள புராதனப் பொருட்களின் அழிவைத் தடைசெய்யும் அலகைச் சேர்ந்த அலுவலர் ஒருவர்* | 5% |
| (ix) | *நிதியத்தின் நிர்வாகத்திலும் பேணலிலும் ஈடுபட்டுள்ள கணக்கியல் பிரிவின் எவரேனும் அலுவலர் அல்லது உதவி அலுவலர் ஒருவர்* | 4% |
| (x) | *தொல்பொருளியல் திணைக்களத்தின் புத்தாய்வு அலகின் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் அல்லது பிரதிப் பணிப்பாளர்* | 3% |
| (xi) | *தொல்பொருளியல் வெகுமதி நிதியத்தை நிர்வகிப்பதிலும் பேணலிலும் ஈடுபட்டுள்ள நிர்வாகக் கிளையின் எவரேனும் அலுவலர் அல்லது அலுவலர்கள்* | 3% |
| (xii) | *சட்ட வழக்கு நடவடிக்கைகள் தொடர்பான புராதனப் பொருட்களின் அல்லது அமைவிடங்களின் பரிசோதனை யில் ஈடுபட்டுள்ள அல்லது துணைபுரிகின்ற புத்தாய்வு உதவியாளர் பதவியிலுள்ள அலுவலர் ஒருவர்* | 2% |
| (xiii) | *சட்ட வழக்கு நடவடிக்கைகளுக்கு சமுகமளிக்கும் சாரதிகள் மற்றும் வேறு ஊழியர்கள்* | 4% |

**அட்டவணை II**

*(ஒழுங்குவிதி 5)*

தொல்பொருளியல் வெகுமதி நிதியத்தின்கீழ் வெகுமதியொன்றைப் பெறுவதற்குத் தகுதியுள்ள ஆட்களினால் நிரப்பப்படவேண்டிய விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர்:----.
2. முகவரி:-
   தனிப்பட்ட:----.
   அலுவலக:----.
3. தேசிய அடையாள அட்டை இல.:----.
4. திணைக்களம்:----.
5. பதவிப்பெயர்:----.
6. வழக்கு இல.:----.
7. நீதிமன்றத்தின் பெயர்:----.
8. வெகுமதி நிதியத்தில் வைப்பீடு செய்யப்பட்ட தொகை:----.
9. நிறைவேற்றப்பட்ட கடமை:----.

........................................................................ (விண்ணப்பதாரரின் பெயர்) ஆகிய நான் மேலே என்னால் கொடுத்துதவப்பட்ட விபரங்கள் எனது அறிவுக்கெட்டியவரை உண்மையானவையும் செம்மையானவையுமாகும் என இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதன்கண் அடங்கியுள்ள எவையேனும் விவரங்கள் பிழையானவையாகக் காணப்படின் தொல்பொருளியல் வெகுமதி நிதியத்திலிருந்து ஏதேனும் நன்மையைப் பெறுவதற்கு நான் தகைமையிழந்தவராவேன் என்பதை நானறிவேன்.

..................,
வெகுமதிக்கான விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி:----.

மாகாண பிரதி/உதவிப் பணிப்பாளரின் விதப்புரை:

..................,
கையொப்பம்

திகதி:----.

பணிப்பாளர் தலைமையதிபதியின் /அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கட்டளை: ...................................................................................
...........................................................................................................................................................................................
...........................................................................................................................................................................................
...................................................................................................

..................,
கையொப்பம்

திகதி:----.

7-235